திரு. சம்சுதீன் என்கிற கா. மு. கதிரவன் அவர்கள் *1968*-ஆம் ஆண்டு நடைபெற்ற இடைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு *1970*-ஆம் ஆண்டு வரையும், பின்னர் *1971* ஆம் ஆண்டு முதல் *1976* ஆம் ஆண்டு வரையும் அன்றைய திருநெல்வேலி மாவட்டம் தென்காசித் தொகுதியிலிருந்து தொடர்ந்து இரு முறையும், மற்றும் *1989* ஆம் ஆண்டு முதல் *1991* ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூர்த் தொகுதியிலிருந்தும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு மொத்தம் *3* முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றி உள்ளார். மேலும் அவர் *1989* ஆம் ஆண்டு முதல் *1991* ஆம் ஆண்டு வரை அரசு தலைமைக் கொறடாவாகப் பொறுப்பேற்று திறம்படச் செயலாற்றி உள்ளார்.

அன்னார்களது மறைவு குறித்து, அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும், இப்பேரவையின் சார்பிலேயும், என் சார்பிலேயும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்தியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்)*

## 2. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினா எண். *421*, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

**421 —**

### திருப்பத்தூரில் நெல் கொள்முதல் நிலையம் அமைத்தல்

* ***40536—*** திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படுமா?

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவுத் துறை அமைச்சர் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூர் நகரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

*திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில், வேலூர் தாலுகாவிற்கு அடுத்த பெரிய தாலுகாவாக திருப்பத்தூர் தாலுகா உள்ளது. அதிலும் விளைபொருள்கள் நிறைய விளைவதுடன், கேந்திரங்களும் நிறைய உள்ளன. அதிக அளவு நெல் விளைச்சல் உள்ள தாலுகாவாக உள்ளது. அதனால் திருப்பத்தூர் நகரிலே, நேரடி கொள்முதல் நிலையம் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10.05*

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் நிலையங்கள் பொதுவாக நம்முடைய காவிரி டெல்டா பகுதிகளிலே தான் காவிரி பாய்கின்ற மாவட்டங்களிலே தான் இப்போது அமைக்கப்பட்டு வருகின்றன. அங்கே தான், கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு வரை கட்டாயக் கொள்முதல் இருந்தது. இப்போது இணைக் கொள்முதல் திட்டத்தை அங்கே அமுல்படுத்திக் கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று வட ஆர்க்காடு மாவட்டமும் நெல் விளைகின்ற பகுதிதான். ஆனால் நம்முடைய அரசின் திட்டத்தின்படி, காவேரி டெல்டாப் பகுதியாக இல்லாததினாலே அங்கே நேரடிக் கொள்முதல் நிலையம் அமைக்கப்படவில்லை. என்றாலும் எந்த விவசாயியாவது நெல்லை அரசினிடத்திலே கொடுக்க வேண்டுமென்று விரும்பினால் ஒவ்வொரு பகுதியிலும் அந்தந்த தாலுகா கிட்டங்கிகளில் (கொடவுனில்) அந்த நெல்லை எப்பொழுதும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளிடம் சொல்லி, அரசாங்கம் நிர்ணயித்திருக்கின்ற விலையிலே நெல்லைக் கொடுக்கவேண்டுமானால், எல்லா இடங்களிலும் மாநிலம் முழுவதும் நம்முடைய தாலுகா கிட்டங்கிகளிலே (கொடவுனிலே) அந்த நெல்லைக் கொடுக்கலாம். நம்முடைய நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பிலே அந்த நெல்லைப் பெற்றுக்கொள்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூரில் உள்ள தாலுகா ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு நெல் கொள்முதல் செய்யப்பட்டது. தற்பொழுது இல்லை. அதை மீண்டும் இயக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவை வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கவேண்டும். என்றாலும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குக் கொண்டு போய் விவசாயிகள் நெல்லை விற்பதில்லை. அங்கே கொண்டு போய் வைத்து வியாபாரிகளிடம் அவர்கள் விற்கிறார்கள், அதிலிருந்து அவர் கமிஷன் எடுத்துக்கொள்வார். ஆகவே, வாங்குகின்ற முறை கிடையாது. நான் இப்பொழுது சொல்வது, நம்முடைய நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் எந்த இடத்திலும் விவசாயிகளுடைய நெல்லை வாங்கிக்கொள்வார்கள். அரசாங்கம் நிர்ணயித்திருக்கின்ற விலையில் அவர்கள் கொடுக்க விரும்பினால் ஒவ்வொரு தாலுகா கிட்டங்கிகளிலும் (கொடவுனிலும்) கொண்டு போய் கொடுத்தால் அவர் விலைக்குப் பெற்றுக்கொள்வார்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** வினா எண் 422, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**422 —**

## பள்ளிக்குப்பத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் துவங்குதல்

**** 26201—டாக்டர் ஜெ. பரந்தாமன் :***

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி வட்டம், பள்ளிக்குப்பம் கிராமத்தில், ஆரம்ப சுகாதார நிலையம் துவங்க அரசு ஆவன செய்யுமா?

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் இல்லை.

***டாக்டர் ஜெ. பரந்தாமன் :*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதி, பள்ளிக்குப்பம் ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க அந்தப் பகுதி மக்கள் பணம் கொடுக்கவும், இலவச நிலம் தரவும், அரசுக் கட்டிடம் வரும் வரையில் இலவச இடம் தருவதற்கும் தயாராக